ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1774/37 - 2012 සැප්තැම්බර් 07 වැනි සිකුරාදා - 2012.09.07
*1774/37 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி பிட்டபெத்தர நீர்வழங்கள் திட்டத்தின் நீர்ப்பம்பி நிலையம் நிர்மாணிப்பதற்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மாத்தறை மாவட்டத்தில், பிட்டபெத்தர பிரதேச செயலாளர் பிரிவில், மொரவக் கோரளே சிறு பிரிவில், பிட்டபெத்தர கிராமத்தில் அமைந்துள்ள, பிட்டபெத்தர நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. மாற/பீபீபீ/2011/461 உம், 2011.12.30 ஆந் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் 0.0051 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய 'முருக்கன் தொல' என்னும் காணியின் எல்லைகள்:

**01. துண்டு 'ஏ' - முருக்கன் தொல - விஸ்தீரணம் : 0.0051 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (வீ.அ.அ.), டபிள்யூ. எச். லலித் மகிந்தசிறி உரிமை கோரும் முருக்கன் தொல தோட்டம்; கிழக்கு மற்றும் தெற்கு : டபிள்யூ. எச். லலித் மகிந்தசிறி உரிமை கோரும் முருக்கன் தொல தோட்டம்; மேற்கு: டபிள்யூ. எச். லலித் மகிந்தசிறி உரிமை கோரும் முருக்கன் தொல தோட்டம் மற்றும் வீதி (வீ.அ.அ.).

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல.: 4/3/9/2011/டபிள்யூஎஸ்/238.
பிரதேச செயலாளர் இல. : பிரீபீ/எல்என்டீ/ஏசீகியூஜ/7/23.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
இல. 1200/6, "மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2012.09.05.

09 - 705

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், குபுறுபிடிய பிரதேச செயலாளர் பிரிவில், ககபட பத்துவை வடக்கு சிறு பிரிவில், கோதாவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தாயாரிக்கப்பட்ட இல. மாற/கேஎம்பீ/96/215 மற்றும் 1997.12.12ஆந் திகதியைக் கொண்ட ஆரம்ப வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள 0.0094 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய 'பொல்கஸ்தெக வத்த' எனும் காணியின் எல்லைகள்:

**01. துண்டு 'ஏ' - பொல்கஸ்தெக வத்த - விஸ்தீரணம் : 0.0094 ஹெக்டயார்**

வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு : ஜெ. விக்கிரமசிங்க உரிமை கோரும் பொல்கஸ்தெக வத்த; மேற்கு : வீதி.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

எனது இல.:13/96/டபிள்யூஎஸ்/128.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
இல. 1200/6, "மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2012.06.28

09-706